1973 ஏப்ரல் 3]

நில அளவை—நில ஆவணங்கள் துறையில் உள்ள தற்காலிகப் பணியாளர்கள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்காலிகப் பணியாளர்களை முறையான பணியில் வைத்துக் கொள்வது தொடர்பான முரண்பாடுகள் குறித்து நில அளவை—நில ஆவணங்கள் துறையில் பணியாற்றும் நில அளவையாளர், வரைபட வரைவாளர் ஆகியோரிடமிருந்து 1971, நவம்பரில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இந்த முறையீடு 1971 நவம்பரில் அரசுக்குக் கிடைக்கப் பெற்றதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிருர்கள். 1973 வரையிலும் இந்தப் பரிசிலனை முடிவடையாமல், அரசு ஆணை வெளியிடாத நிலை இருக்கிறது. இதை துரிதப்படுத்தி உடனடியாக அரசு ஆணை வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த இலாகாவைச் சார்ந்த ஒருவர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்ருர். ஒரு ரிட் மனு உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. அதில் காலதாமதம் இருக்கிறது. வேறு சிலவற்றையெல்லாம் அரசு வருவாய் துறை வாரியத்தோடு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு முடிந்த பின் சிக்கிரம் ஒரு முடிவு செய்ய முடியும்.

Financial Assistance to the Flood Victims

* 339 *Q*.—Thiru S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the financial assistance given to flood victims in the State during December 1972 and January 1973 ?

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் நிதியுதவி

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்தில், 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலும், 1973 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் யாவை?

THE HON. THIRU P. U. SHANMUGAM : A statement @ is placed on the table of the House.

Betel Leaf Production

* 340 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any incentives are given to betel leaf production in this State : and

(*b*) if so, the details thereof ?

வெற்றிலை உற்பத்தி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் வெற்றிலை உற்பத்திக்காக ஊக்க உதவிகள் ஏதேனும் அளிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தமிழ் நாட்டில் வெற்றிலை உற்பத்திக்கு விசேட சலுகை அளிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Audit Reports of the Co-operative Central Banks

‡* 330 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the names of the Co-operative Central Banks in the State which have not placed their Audit Report at the Annual General Body Meeting for the last three years ?

கூட்டுறவு மத்திய வங்கிகளின் தணிக்கை அறிக்கைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

@ 271–272 ஆம் பக்கங்களில் இணைப்பு II *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

‡ 2—4—1973 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.